உத்தரவு: திய அரசு கொண்டு வந்த இலவச கல்வித் துறை செயலாளரை எதிர் டுள்ளார். கப்பட்டன.

# ‘மாணவர்களை மனிதவளமாக மேம்படுத்த கூடுதல் முயற்சி அவசியம்’

தாம்பரம், ஆக. 22: தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவர்களை, தொழில்துறையின் தேவைக்கேற்ற மனிதவளமாக மேம்படுத்த கூடுதல் முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பிரேக்ஸ் இந்தியா நிறுவனத் துணைத் தலைவர் மனோஜ் ஹோம்பல் கூறினார்.

சென்னையை அடுத்த மேற்கு தாம்பரம் சாய்ராம் பொறியியல் கல்லூரி உற்பத்திப் பொறியியல் துறை சார்பில் நடைபெற்ற கருத்தரங்கில் அவர் மேலும் பேசியது:

தொழில் துறையில் தொடர்ந்து நிகழ்ந்து கொண்டிருக்கும் தொழில்நுட்பவளர்ச்சிக்கேற்ப, பணியாளர்கள் தங்களது திறனை மேம்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. தொழில்நுட்பத்திறனை மேம்படுத்திக் கொள்ள இயலாதவர்கள் வேலைவாய்ப்பை இழக்கும் நிலை உருவாகி உள்ளது.

பொறியியல் கல்லூரிகளில் போதிக்கப்படும் பாடத்திட்டத்திற்கு மேலான தொழில்நுட்ப அறிவாற்றலை, இணையதளம், நூலகம் மூலம் மாணவர்கள் மேம்படுத்திக் கொள்ள முடியும். மாணவர்களை அறிவாற்றல் மிகுந்த மனிதவளமாக மேம்படுத்தும் ஆசிரியர்களின் பங்களிப்பும் பாராட்டத்தக்கது என்றார் அவர்.



மேற்கு தாம்பரம் சாய்ராம் பொறியியல் கல்லூரி உற்பத்தி பொறியியல் துறை சார்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற கருத்தரங்கில் மாணவர்களுடன் கலந்துரையாடுகிறார் பிரேக்ஸ் இந்தியா நிறுவனத் துணைத் தலைவர் மனோஜ் ஹோம்பல். உடன் துறைத் தலைவர் தமிழரசன், கருத்தரங்கு ஒருங்கிணைப்பாளர் பி.வி.இன்பநாதன்.